கர்த்தரின் தாசனாகிய ஆபிரகாமின் சந்ததியே

O Descendants of Abraham His Servant

Album 26 Song 1 **ஆல்பம் 26 பாடல் 1**





கர்த்தரின் தாசனாகிய   Wed 02 May '07

2007   December

Priorities   105 சங்கீதம்   26 Wednesday

கர்த்தரின் தாசனாகிய ஆபிரகாமின் சந்ததியே
அவரால் தெரிந்துக்கொண்ட யாக்கோபின் புத்திரரே
கர்த்தருடைய நாமத்தை துதியுங்கள் தேசங்களே
தேவனின் வல்லமையை என்றும் நாடுங்கள்
பரிசுத்தரின் நாமத்தை மேன்மை பாராட்டுங்கள்
ஆண்டவரின் அதிசயங்களை தியானித்துப் பேசுங்கள்

கர்த்தர் செய்த அற்புதங்களை நினைவுகூருங்கள்
தேவ வாக்கின் நியாயத்தீர்ப்பை நினையுங்கள்
கர்த்தரே நம்முடைய தேவன் என்று உணருங்கள்
கர்த்தரின் நியாயத்தீர்ப்பை பூமியெங்கும் விளக்குங்கள்
(கர்த்தருடைய)

ஆயிரந்தலைமுறைக்கென்று கட்டளையிட்ட வாக்கையும்
ஆபிரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கையும்
ஈசாக்குக்கு தேவன் கொடுத்த ஆணையையும்
யாக்கோபுக்கு பிரமாணமாக்கி இஸ்ரவேலுக்கு உறுதிப்படுத்தினார்
(கர்த்தருடைய)


நாடோடியாய் நாடுவிட்டு நாடுபோன ஜனங்களுக்கு
கானான் தேசத்தை உங்களுக்குத் தருவேன் என்றார்
தமது ஜனங்களை ஒடுக்காத படிக்கு
சகல ராஜாக்களையும் கடிந்துக் கொண்டார்
(கர்த்தருடைய)

நான் தொட்டு அபிஷேகித்தவனை நீங்கள் தொடாமலும்
எனது தீர்க்கதரிசிக்கு தீங்கு செய்ய வேண்டாம் என்றார்
யாக்கோபின் தேசத்திலே பஞ்சத்தை வருவித்தார்
ஆகாரமென்னும் ஆதரவு கோலை முற்றிலும் முறித்தார்
(கர்த்தருடைய)

கர்த்தரின் திட்டத்தாலே யோசேப்பு விற்கப்பட்டான்
எகிப்து தேசத்திற்கு சிறைக்கொண்டு போகப்பட்டான்

Jan '08	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T
	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26	27	28	29	30	31

If you speak insults, you will hear them.


HOLY
December
2007
27
Thursday
Priorities
The secret of success is to know something nobody else knows.
PRAISE
AMEN

